**கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை.**

**முன்னிலை: திரு.கே.பி.சத்தியமூர்த்தி, பி.இ., எம்.சி.ஏ., எம்.ஐ.இ.,**
**கண்காணிப்புப் பொறியாளர் (மு.கூ/ பொ)பொபது.,**

**செ.மு.ஆ.எண்.நி2/929/2020/ நாள்.04.05.2021.**

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - த.நா.அ.ப.தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.பா.டில்லிபாபு, த/பெ காலஞ்சென்ற அரசு ஊழியர் - திரு.க.பாலசுப்பிரமணியம், கண்காணிப்பாளர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் - பணி வரன்முறை - ஆணை வழங்குதல்.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சென்னை-5 அவர்களின் செ.மு.ஆணைஎண்.எஸ்3(4)/53723/2009 நாள் 27.07.2018.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொபது., சென்னை – 05 அவர்களின் நி3(3)/40234/2018 நாள்: 21.08.2018.
3. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1)த் துறை நாள்:23.01.2020.
4. செயற்பொறியாளர், பொபது., வடமாநகரக் கோட்டம், அவர்களின் கடிதஎண்:நிஎ1/887/2018 நாள்:24.02.2020 மற்றும் நிஎ1/374/2021/நாள் 15.04.2021.
5. இவ்வலுவலக கடித எண். நி2 / 929 / 2020 நாள்: 22.01.2021.
6. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1)த் துறை நாள்:26.02.2021.
7. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொபது., சென்னை – 05 அவர்களின் அதிமு கடித எண்: நி3(3)/1943/2021 நாள்: 18.03.2021.

*****

பார்வை 3 காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

பார்வை 6ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரையிலான காலத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு கீழ்காணும் வழிமுறைகள் (Guidelines) பின்பற்ற வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்பட வேண்டும்.

கருணையடிப்படையில் பணி அமர்த்தப்பட்ட அரசு பணியினை வரன்முறை செய்வதற்கான அதிகாரம் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு (One level higher than the appointing authority) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

திரு.பா.டில்லிபாபு இளநிலை உதவியாளரின் பணி வரன்முறை தொடர்பான கருத்துரு, பார்வை 5ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசிடமிருந்து ஆணை பெற்று வழங்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பார்வை 7ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடிதத்தின் வாயிலாக கூடுதல் விவரங்கள் கோரப்பட்டு அக்கருத்துரு இவ்வலுவலகத்திற்கு திருப்பப்பட்டது. அக்கூடுதல் விவரங்கள் பார்வை 4ல் காணும் சென்னை, வடமாநகரக் கோட்ட செயற் பொறியாளரின் 15.04.2021 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது.

சென்னை, மெரினா உபகோட்ட அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த திரு.க.பாலசுப்பிரமணியம் கடந்த 03.03.2007 அன்று காலமானதை அடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகனான திரு.பா.டில்லிபாபு என்பவர் 12.07.2007 நாளிட்ட கடிதத்தில் கருணை அடிப்படையில் தனக்கு வேலை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, பார்வை 3ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் படி, அவர் முழு கல்வி மற்றும்

--3--

வயது தகுதிகள் பெற்றுள்ளதால் பார்வை 1ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம்-2016)இல் உள்ள பிரிவில் 17(1)ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு சென்னை வட மாநகரக் கோட்ட அலுவலகத்தில் 27.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 6ல் காணும் அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரையிலான காலத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு வழிமுறைகள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளதால், பார்வை 4ல் காணும் செயற் பொறியாளர் அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்ட கருத்துருவினை நன்கு ஆய்வு செய்ததின் அடிப்படையிலும், திரு.பா.டில்லிபாபு இளநிலை உதவியாளர் அவர்கள் பார்வை 3ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும் பார்வை 6ல் காணும் அரசாணையின் வழிகாட்டுதலின்படி, அவரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 27.08.2018 முற்பகல் முதல் பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவருக்கு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வு/ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின் படி இவர் தகுதியுடையவராகிறார்.

மேலும், திரு.பா.டில்லிபாபு, இளநிலை உதவியாளர் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் ) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம்-2016)இல் உள்ள பிரிவில் 28(1)ன்படி தமிழ்நாடு அரசு பணிகளின் கீழ் இவர் இளநிலை உதவியாளராக பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 27.08.2018 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

..4..

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை 27.08.2018 முற்பகல் முதல் தொடங்கி, மூன்றாண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும்.

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

கண்காணிப்புப் பொறியாளர் சார்பில் பொபது.
கட்டட(கட்டுமான மற்றும் பராமரிப்பு)வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5

06-05-2021

**பெறுநர்**

திரு.பி.டில்லிபாபு, இளநிலை உதவியாளர்
வழி:செயற் பொறியாளர் பொ.ப.து வட மாநகரக் கோட்டம், சென்னை - 05.